THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

# SUGGESTED SOLUTIONS

NOT FOR SALE

## KE4 – Processes, Assurance & Ethics

**March 2016**

All Rights Reserved

# பகுதி – 1

## விடை 01

1.1

| கற்றல் வெளிப்பாடு |
|---|
| சரியான விடை : C |

1.2

| கற்றல் வெளிப்பாடு |
|---|
| சரியான விடை : A |

1.3

| கற்றல் வெளிப்பாடு |
|---|
| சரியான விடை : D |

1.4

| கற்றல் வெளிப்பாடு |
|---|
| சரியான விடை : D |

1.5.

| கற்றல் வெளிப்பாடு |
|---|
| சரியான விடை : D |

1.6

| கற்றல் வெளிப்பாடு |
|---|
| சரியான விடை : C |

NOT FOR SALE

1.7

| **கற்றல் வெளிப்பாடு** |
|---|
| சரியான விடை : C |

1.8.

| **கற்றல் வெளிப்பாடு** |
|---|
| சரியான விடை : A |

1.9

| **கற்றல் வெளிப்பாடு** |
|---|
| சரியான விடை : D |

1.10

| **கற்றல் வெளிப்பாடு** |
|---|
| சரியான விடை : D |

**(மொத்தம் 20 புள்ளிகள்)**

NOT FOR SALE

**விடை 02**

2.1.

| கற்றல் வெளிப்பாடு |
|---|
| இடர் முகாமைத்துவ சட்டகத்தில் உள்ளடங்கும் மூலக்கூறுகள் ஆவணம்: (ஆகக்கூடியது 3 புள்ளிகள்) |

- இடர் <u>மதிப்பீடு</u> / இடர் இனம்காணல்
- இடர் <u>பதிலிறுக்கை</u>: இடரைக் கையாள்தல்
- <u>கண்காணிப்பு</u> மற்றும் மீளாய்வு

**2.2 கற்றல் வெளிப்பாடு:**

மூன்று உள்ளமைந்த வரையறைகளாவன:

(a) மனித தவறுகள் - இது அலுவலர் உள்ளகக்கட்டுப்பாட்டை செயற்படுத்த மறந்து விடுவது அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை பிழையான முறையில் செயற்படுத்துவது.

(b) ஊழியர்களுக்கிடையிலான கூட்டினைவு நோக்கங்கள் - இது ஊழியர்கள் நன்று சேர்ந்து உள்ளகக்கட்டுப்பாட்டின் நோக்கத்தை அடைவதற்கு எதிராக செயற்படும் சந்தர்ப்பமாகும்

(c) முகாமைத்துவத்தால் கட்டுப்பாடுகள் மீறப்படல்.
இது முகாமையாளர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி கட்டுப்பாடுகளுடன் இணங்கி நடப்பதை மீறுதலை குறிக்கும்.

(d) நிறுவனத்தின் இடர் அறிந்திருத்தல் கலாசாரத்திக் பலம்.

(e) தொழிற்பாட்டு தோல்விகள் மற்றும் தவறுகளை தடுக்க முடியாமை.

(f) கட்டுப்பாடுகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கலாம்.

(g) வியாபரச் சூழலின் தொடர்ச்சியான மாற்றங்களும் அபிவிருத்தியும்.

(h) கிரயங்களை நியாயப்படுத்தாத பலன்கள்.

**2.3 கற்றல் வெளிப்பாடு:**

வரையறுக்கப்பட்ட சில்வர்லைன் (தனியார்) நிறுவனத்தின் சம்பளப்பதிவேட்டில் உள்ள வியாபார இடர்கள்.

i. நிறுவனத்தின் ஊழியப்புரள்வு அதிகம். ஆகவே, விலகிச்சென்ற ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்தப்படும் இடர் காணப்படுகிறது.

ii. ஊழியர்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமான கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. (உதாரணம்: மேலதிக வேலைநேர கொடுப்பனவு, வருகைத்தருதல் கொடுப்பனவு, etc……) ஆகவே, சம்பளம் மற்றும் மேலதிக வேலைநேர கொடுப்பனவுகள் பிழையாக கணிக்கப்படும் இடர் காணப்படுகிறது. இது ஊழியர்களுக்கு அதிகமாக அல்லது குறைவாக கொடுப்பனவுகளை செய்ய விளைவிக்கலாம்.

iii. நிறுவனத்தின் மனிதவள திணைக்களத்தால் பிழையான சம்பளப் பதிவேட்டு தகவல்கள் வழங்கப்படுவதற்கான இடர் காணப்படுகிறது.
இது தவறான கொடுப்பனவுகளுக்கு வழிவகுக்கலாம்.

NOT FOR SALE

2.4 **கற்றல் வெளிப்பாடு:**

தவறவிடப்பட்ட அத்தியாவசிய நிரல்கள்.

(i) குறைந்த பட்ச அளவு வழங்கப்படவில்லை.
(ii) விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு பொருளுக்குமான தொகை (ஆகக் கூடியது
(iii) தொக்கு மட்டம்
(iv) அளவு/ அளவீடு (Kg, லீற்றர்)

**2.5 கற்றல் வெளிப்பாடு:**

a. முறையாக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டில் உள்ளடக்கப்படாத நடைமுறையல்லாத/ ஆதனம் பொறி உபகரணங்களை கொள்வனவு செய்தல்.
b. முயைான அங்கீகாரம் இன்றி சந்தை பெறுமதியிலும் குறைவாக நடைமுறையல்லா சொத்துக்களை விற்றல்
c. நடைமுறையல்லாத சொத்துக்களின் களவு, இழப்பு அல்லது சேதம் .
d. கணக்கீட்டு அறிக்கைகளில் முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட முடியும்.
e. கண்டுபிடிக்கப்பட்ட முடியாத அல்லது இல்லாத/கனப்படாத சொத்துக்கள்.

**2.6 கற்றல் வெளிப்பாடு:**

மேற்குறித்த செயன்முறையில் உள்ள பிரதான குறைபாடு ஆனது போதியளவு கடமைப்பகர்வு இன்மையாகும்.
இதன் விளைவாக, முகாமையாளர் வழங்குனருடன் கூட்டிணைந்து மோசடிகளில் ஈடுபடலாம் அதாவது முகாமையாளர் விநியோகிக்கப்படாத பண்டங்களுக்கான விற்பனை பட்டியல்களை அங்கீகரிக்கலாம்.

**2.7 கற்றல் வெளிப்பாடு:**

பலனுறுதியற்ற வடிவமைப்புக்கான காரணங்களாவன:

(i) இடர்கள் சரியாக மதிப்பிடப்படவில்லை
(ii) வழக்கமான நடவடிக்கைகளுக்கு இடர்கள் ஏற்பிசைவு செய்யப்பட்ட போதிலும் வழக்கத்துக்கு மாறான சந்தர்பங்களுக்கு ஏற்பிசைவு செய்யப்படவில்லை கட்டுப்பாடுகள் தன்னிச்சையாக இயங்கக் கூடியவை அல்ல அவற்றிற்கு நபரொருவரிடமிருந்து துலங்கல் தேவைப்படுகிறது.
(iii) கட்டுப்பாட்டு நடவடிக்கை அதன் நோக்கத்தை; குறிக்கோளை எட்டுவதற்கு போதுமானதாக இல்லை.

NOT FOR SALE

**2.8 கற்றல் வெளிப்பாடு:**

(a) <u>சுய அக்கறை அச்சுறுத்தல்</u>
இது கணக்காளராக <u>தனிப்பட்ட நோக்கங்கள் அவரது அனுமான முடிவுகளில் மற்றும் செயற்பாடுகளில் தாக்கம்</u> செலுத்துவதை குறிக்கும்.

(b) <u>பரிச்சயத்தன்மை அச்சுறுத்தல்</u>
ஒரு கணக்காளர் தனது <u>தனிப்பட்ட தொடர்புகள் காரணமாக மிகவும் பரிதாபப்படலாம்.</u> இது கணக்காளரின் நேர்மைமயை அச்சுறுத்தலாம்

(c) <u>மிரட்டல் அச்சுறுத்தல்</u>
ஒரு கணக்காளர் எதிர்காலத்தில் கணக்காய்வாளராக நியமிக்கப்படாமல் இருப்பார் என அச்சுறுத்தப்படலாம். ஏனெனில் அவர் வடிவமைக்கபட்ட அபிப்பிராயமொன்றை வெளியிட வேண்டி தேவையொன்று காணப்படுவதாகும்.

(d) <u>சுயமீளாய்வு அச்சுறுத்தல்</u>
கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வு செய்யப்பட்ட முடியுமான தீர்ப்புகள்

(e) <u>வதாட்ட அச்சுறுத்தல்</u>
சேவைப் பெறுனர் அல்லது தொழில்கொள்வோர் சார்பான கருத்தை அல்லது நிலைப்பாட்டை மேம்படுத்தல்

**2.9 கற்றல் வெளிப்பாடு:**

உறுதிப்பாட்டு நியமமொன்றில் உள்ளடங்கும் மூன்று தரப்புகளாவன.

(i). <u>உத்தேச பயனாளி</u> - இவர்கள் யாருக்காக தொழில் நடத்துனர் அறிக்கையினைத் தயாரிக்கிறாரோ அந்த நபர் அல்லது குழுவினைக் குறிக்கும்

(ii). பொறுப்பு வாய்ந்த தரப்பு– உறுதிப்பாட்டு நியமனத்தின் விடயம் அல்லது விடயப் பொருள் தகவலிற்கு பொறுப்பான நபரை அல்லது (நபர்களை) குறிக்கும். இது பொதுவாக உறுதிப்பாட்டு நியமனம் ஒன்றினைப் பொறுப்பேற்று நடாத்தும் வண்ணம் தொழில் நடத்துனர் ஒருவரை நியமிக்கும் கம்பனி ஒன்றினை குறிக்கும்.

(iii). தொழில் நடத்துனர்– விடயப் பொருளினை மதிப்பீடு செய்து உறுதிப்பாட்டினை வழங்கும் தொழில் திறன்சார் சேவையினை வழங்கும் தனிநபரினைக் குறிக்கும்.

**2.10 கற்றல் வெளிப்பாடு:**

(i) பரிசோதனை
(ii) அவதானம்
(iii) விசாரணை மற்றும் உறுதிப்படுத்தல்
(iv) மீள்கணித்தல்
(v) பகுப்பாள்வு முறைகள்
(vi) மீள் செயன்முறை

**(மொத்தம் 30 புள்ளிகள்)**

NOT FOR SALE

# பகுதி – 2

## விடை 03

**தொடர்புடை கற்றல் வெளிப்பாடு:**

(a) வியாபார நிறுவனமொன்றின் இடர்களுக்கு அனுகுமுறைகளை கீழ் கோடிடப்பட்ட வசனங்களை விளக்கியிருந்தாலும் புள்ளிகள் வழங்கப்பட முடிவும்.

- இடர் <u>தவிர்ப்பு</u> – எதிர்மறை இடர் வெளிப்பாடுகளுக்கான சாத்தியகூறுகளை அகற்றுவதை குறிக்கும். இடர்களை தவிர்பதற்காக முகாமைத்துவம் புதிய முதலீட்டுத்திட்டங்கள் மற்றும் புத்தாக்க முயற்சிகள் போன்றவை தொடர்பான தீர்மானங்களை தவிர்க்கலாம்.
- இடர் <u>ஏற்பு</u> - இடர்களை கையாள்வதற்கான மேலதிக அளவீடுகளின் தேவையின்றி தற்போதைய இடர்களை ஏற்றல். உதாரணமாக: நன்மைகளை / கொடுப்பனவுகளை கருத்திற் கொண்டு முகாமைத்துவம் சில இடர்களை ஏற்கலாம். உதாரணம்: பொருளாதாரத்தில் வட்டி வீதம் அதிகரிக்கும் போது நீண்டகால வட்டி வீதங்கள் குறையும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக நிறுவனம்/ முகாமைத்துவம் மாறும் வட்டி வீதத்தில் கடன் பெறலாம்.
- இடர் <u>குறைப்பு</u> - இடரானது மிகவும் உச்சகட்டமானதாகவும் பொறுப்பேற்க முடியாதாகவும் இருந்தால் முகாமைத்துவம் இடரை குறைக்க தீர்மானிக்கலாம். இடர்களின் தன்மையினை பொறுத்து இடர் குறைப்பு முறைகள் வேறுபடும். ஊதாரணமாக: வியாபார தொழிற்பாடுகளை பல்வகைப்படுத்தல் மற்றும் நிச்சயமற்ற தன்மை திட்டங்கள் ஆகியன இடர் குறைப்பு முறைகளில் சிலவாகும்.

(b) <u>பணிப்பாளர் சபை</u>

STPLஇன் பணிப்பாளர் சபையானது STPL ஐ ஆளுமை செய்யும் அமைப்பாகும். STPL இன் உள்ளகக்கட்டுப்பாடுகளின் பயனுறுதி தன்மையான செயற்பாடுகளுக்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும்.

பிரதான பொறுப்புக்களாவன:

- STPL இன் முதலீடுகள் மற்றும் ஆதனங்களை பாதுகாப்பதற்காக திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை இயக்குநர்கள் ஏற்படுத்த வேண்டும்.

- STPL உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் STPL இன் நோக்கங்களை அடைவது சம்பந்தமாக நியாயமான உறுதிப்பாட்டினை வழங்குகின்றது. என்பதை இயக்குநர்கள் உறுதிப்படுத்த வேண்டும்

- STPL இன் முக்கயத்துவம் வாய்ந்த இடர்களை இனம்காணல் மதிப்பிடல் மற்றும் முகாமை செய்தல் தொடர்பான நடைமுறையொன்று இருப்பதை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்த வேண்டும்.

NOT FOR SALE

(மாணவர்கள் ஆண்டறிக்கை அல்லது கூட்டிணைவு அறிக்கையின் மிகச்சரியான நடைமுறைகளின் வீதத் தொகுப்பு (Code of Bost Practice on Corporate Governance) சம்பந்தமாக குறிப்பிட்டிருந்தால், அவர்கள் இது தனியார் கம்பனி என்பதால் அவைகள் கட்டாயமானதல்ல என்பதை விளக்க வேண்டும்).

(ii) <u>உள்ளகக் கணக்காய்வாளர்</u>

உள்ளகக் கணக்காய்வாளர் முகாமைத்துவதற்கு நிறுவனத்தின் உள்ளகக்கட்டுபாடுகள் பற்றிய <u>தகவல்களையும் பரிந்துரைகளையும் வழங்குவார்</u>. அவர்/அவள் STPL இன் உள்ளகக் கட்டுபாடுகள் தொடர்பான <u>நேரடிப் பொறுப்பை கொண்டவர் அல்ல</u>

உள்ளகக் கணக்காய்வாளர் கட்டுப்பாட்டு முறைகளை விசாரித்து அது சம்பந்தமாக STPL பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுவார் இவ்வறிக்கை அவரது அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கி இருக்கும் (மேற்படி வினாவில் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக)

NOT FOR SALE

**விடை 04**

**தொடர்புடைய கற்றல் வெளிப்பாடு:**

(a) (i) தொழில் திறன்சார் கணக்காளரின் நிதிசார் நடத்தை.

(i) கணக்கீட்டு தொழில்துறை அதன் அங்கத்துவர்களை பொதுமக்களுக்கான தமது சேவைகள் குறிப்பிட்ட நியமங்களுக்கு அமைவாக வழங்குமாறு வேண்டி நிற்கிறது. தொழிற்துறை அங்கத்துவர்கள் எதிர்பார்க்கப்பட்ட நியமங்களை பின்பற்றுவதன் மூலமே தொழிற்துறையின் மதிப்பும் நிலைமையும் பாதுகாக்கப்படுகிறது. சேவைகளை வழங்கும் போது குறித்த நியமங்களுக்கு ஒருங்கிணையாவிட்டால், மேலும் அதன் விளைவாக குறைதரமுள்ள சேவைகள் வழங்கப்பட்டால், அது தொழிற்துறைக்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்தும்

(ii) அங்கத்துவர் ஒருவர் ஒழுக்க நெறிசார் நடத்தைகளை பேணவேண்டிய மற்றுமொரு காரணமாவது, ஒழுக்க நெறியற்ற நடவடிக்கைகளுக்காக தொழிற்துறைசார் அமைப்பு ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கலாம். அந்நடவடிக்கையானது அங்கத்துவத்தை ரத்து செய்வதாகவும் அமையலாம். இது அங்கத்துவரின் எதிர்கால தொழிலை எதிர்மறையாக பாதிக்கலாம்.

(iii) ஒழுக்க நெறிசார் நடவடிக்கையானது நாட்டின் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதை உள்ளடக்கி இருக்கும். ஒரு அங்கத்தவர் நாட்டின் சட்டங்களுக்கு முறனாக நடந்து கொண்டால், அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு தண்டிக்கப்படலாம். இவ்வாறான நடத்தை குறிப்பிட்ட அங்கத்தவருக்கு மாத்திரமல்லாமல் தொழிற்துறையில் உள்ள ஏனைய அங்கத்தவர்களையும் எதிர்மறைாக பாதிக்கலாம்.

(iv) ஒழுக்க நெறிசார் நடவடிக்கையான பொதுமக்களின் நன்மைகளை பாதுகாகக் செயற்படுகிறது.

(ii) சாமிகா இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் (CA Sri Lanka) அங்கத்தவராவார். ஆகவே, ஒரு தொழில்துறைசார் கணக்காளராக ஒழுக்க நெறிசார் நடத்தைகளுக்கான எதிர்பார்ப்புகள் அதிகமாகும். அவர் NPPL நிறுவனத்தின் கொடுப்பனவு தொழிற்பாட்டை கையாள்வதால், அவர் தனது கடமைகைளை ஒரு தொழிற்துறைசார் கணக்காளராக நம்பிக்கை பெறுமானங்களுடன் நிறைவேற்றப்பட வேண்டும். NPPL நிறுவன வணிகத்தின் பணம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான செயற்பாடுகள் மோசடிகள் மற்றும் ஏனைய குற்றச்செயல்கள் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக காணப்படும் செயற்பாடுகளாகும். உதாரணமாக, மோசடியான கொடுப்பனவுகளை மேற்கொள்வது மற்றும் தேவையைவிட அதிகமாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதை குறிப்பிடலாம். மேலும் ஒழுக்க

NOT FOR SALE

நெறிமுனான நடவடிக்கைகளுக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம். (லஞ்சம்). ஆகவே சாமிகா மேற்படி விடயங்களை கருத்தில் எடுத்து ஒழுங்க நெறிசார் முறையில் தனது கடமைகளை செய்ய வேண்டும் ஏனெனில், தொழில் கொள்வோர் தமது நிதி சம்பந்தமாக சாமிகாவை நம்பியுள்ளனர். தரவுகளை அடையாளங்காணல் ஏன் ஒழுக்கம் அவசியம்

(b) (i) ஆவணம் 01- கொள்வனவு கட்டளை / உறுதிப்படுத்தல்.
ஆவணம் 02- பொருள் பெறுகை குறிப்பு

(ii) ஆவணம் 01- மற்றும் ஆவணம் 02 இன் நோக்கங்கள்
ஆவணம் 01 – கொள்வனவு கட்டளை உறுதிப்படுத்தல்

நோக்கம்:
கொள்வனவு கட்டளையானது கொள்வனவு திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு வழங்குநருக்கு அனுப்பப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவு கட்டளை வழங்குநரிடம் கட்டளையை இடுவதற்காக பயன்படுத்தப்படுகிறது. கோள்வனவு கட்டளை மூலம் நிறுவனத்திற்கு தேவையான பொருட்கள், அளவு ஆகியன வழங்குநருக்கு அறிவிக்கப்படுகிறது.

ஆவணம் 02- பொருள் பெறுகை குறிப்பு

நோக்கம்:
விநியோகிக்கப்பட்ட பொருட்கள் ஒப்படைக்கப்பட்டதும் களஞ்சியக் காப்பாளர் பெற்றுக் கொள்ளப்பட்ட பொருட்களின் விபரங்களை உள்ளடக்கி பொருள் பெறுகை குறிப்பை தயாரிப்பார் ($\frac{1}{2}$புள்ளி). மேலும் இவ்வாணம் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் கொள்வனவு கட்டளை ஆகியவற்றுடன் இனக்கப்படுத்தப்படும்.

NOT FOR SALE

## விடை 05

**தொடர்புடைய கற்றல் வெளிப்பாடு:**

(a) சட்டரீதியான கணக்காய்வு மற்றும் மீளாய்வு நியமனங்கள் ஆகியவற்றிடையேயான வேறுபாடுகள்

1. சட்டரீதியான கணக்காய்வானது பல்வேறுபட்ட அக்கறையுடையோரின் பல விதமான கரிசனைகளுக்கு உறுதிப்படுத்தல் வழங்குவதற்காக பயன்படுத்தப்பட முடியும். ஆனால் சட்டத்தினால் வேண்டப்படும் கணக்காய்வானது உயர்மட்ட உறுதிப்பாட்டினை வழங்கும் நடவடிக்கை என்பதால் உயர் அளவிலான பரிசீலனை மற்றும் கிரயங்களை கொண்டது.

   மீளாய்வு அறிக்கையின் பாவனையாளர்கள் குறைந்த பரப்பளவுடைய நியமனத்தின் மூலம் ஒரு பிரச்சினை பற்றி தேவையான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வார். மேற்படி மீளாய்வானது சட்டத்தினால் கணக்காய்வொன்று வேண்டப்படாத இடத்தில் கிரயப்பயன் வாய்ந்த ஒரு மாற்று நடவடிக்கையாகும்.

2. வெளிவாரிக் கணக்காய்வாளர், கணக்காய்வு செய்யப்பட்ட தகவல்கள் பொருன்மை தன்மை வாய்ந்த வழுக்களிலிருந்து விடுபட்டது. எனும் உயர்தர உறுதிப்பாட்டினை வழங்குகிறார் ஆனால் துல்லியமான உறுதிப்பாடு அல்ல. இவ்வுறுதிபாடானது நியாயமான உறுதிப்பாடாக நேர்மறையானதாக கணக்காய்வு அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

   கணக்காய்வு செய்யப்பட்ட தகவல்கள் பொருன்மை தன்மை வாய்ந்த வழுக்களிலிருந்து விடுபட்டது. எனும் உயர்தர வரையறுக்கப்பட்ட உறுதிப்பாட்டினை வழங்குகிறார் இது எதிர்மறையான வடிவில் வெளிப்படுத்தப்படுகிறது.

(b) DT நிறுவனமானது ஒரு பொறுப்பு வரையறுக்கபட்ட கம்பனியாகும். ஆகவே சட்டரீதியான தேவைப்பாடுகளுக்கு அமைய சட்டரீதியான கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(a) DT நிறுவனத்தின் கணக்காய்வாளர்கள் இலங்கை கணக்காய்வு நியமனங்களுக்கு (SLSUS) அமைவாக கணகாய்வை நடத்த வேண்டும். 1995ம் ஆண்டு 15ம் இலக்க இலங்கை கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் படி விதிந்துரைக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமனங்களுக்கு அமைவாக செயற்படுவது கட்டாயமாகும். இச்சட்டமானது குறிப்பிட்ட நியமங்களுக்கு கட்டுப்படுவது கணக்காய்வாளர்களின் பொறுப்பாகும்.

ஒரு கணக்காய்வாளர் கணக்காய்வொன்றை நடத்தும் போது தொழிற்திறன்சார் கணக்காய்வாளர்களுக்கான ஒழுக்க நெறி விதித்தொகுப்புடன் இணைந்து நடப்பதுடன் மற்றுமல்லாது கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமனங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

NOT FOR SALE

இலங்கை கணக்காய்வு நியமனங்களுக்கு அமைவாக கணக்காய்வினை நடத்தும் போது கணக்காய்வாளரது கணக்காய்வின் பொதுவான நோக்கங்களை அடைய வழிவகுக்கும். இதன் விளைவாக கணக்காய்வாளர் தொடர்புடைய இலங்கை கணக்காய்வு நியமங்களை முழுமையாக விளங்குவதுடன் அதற்கமைய செயற்படுவது அவசியமாகும்.

கணக்காய்வாளர்கள் பிரயோகிக்க வேண்டிய விஷேட அவதானங்களுடன் இலங்கை கணக்காய்வு நியமங்கள் தெளிவுபடுத்தப்படுகிறது. ஆகவே கணக்காய்வாளர் இலங்கை கணக்காய்வு நியமங்களுடன் இணைந்து நடப்பது, கணக்காய்வாளரது முக்கிய பொறுப்புக்களை நிறைவேற்ற வழிவகுக்கும்.

பின்வருவனவற்றிற்காக ஒரு கணக்காய்வாளர் இலங்கை கணக்காய்வு நியமங்களுடன் இணைந்து நடப்பது அவசியமாகும்.

(b) கணக்காய்வாளர் ஒரு நிறுவனத்தின் நிதி அறிக்கைகளின் மீதான கணக்காய்வு அபிப்பிராயத்தை அடையும் போது இலங்கை கணக்காய்வு நியமனங்களின் தேவைப்பாடுகளை கடைப்பிடிப்பது தேவையாகும்.

(c) நிதி அறிக்கைகளின் பாவனையாளர்கள், கணக்காயவாளரது அபிப்பிராயமானது கணக்காய்வு தொழிற்துறையின் நியமனங்களுக்கு அமைவான கணக்காய்வு வேலையின் அடிப்படையிலினாது என்ற அறிவைக் கொண்டுள்ளனர். ஆகவே கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் முகாமைத்துவத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி அறிக்கைகளின் தங்கி இருக்கலாம். என்பதை அதன் பாவனையாளர்கள் அறிவார்கள். கணக்காய்வு நியமனங்களுக்கு அமைவாக கணக்காய்வு நடாத்தப்படுவதால் பொதுமக்களின் நம்பிக்கை மேம்படுத்தப்படுகின்றது.

NOT FOR SALE

## விடை 06

**கற்றல் வெளிப்பாடு 3.5/3.7**

(a) பொதுத்தகவல் தொழில்நுட்ப கட்டுப்பாடுகளானது பிரயோக தொழில்நுட்ப கட்டுப்பாடுகளின் பயனுறுதி வாய்ந்த தொழிற்பாடுகளுக்கு உதவும் பல்வேறுப்பட்ட (கொள்கைகளையும் செயன்முறைனளையும் குறிக்கும் பொதுத்தகவல் தொழில்நுட்ப கட்டுப்பாடுகள் பொதுவாக பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கும்.

(i) தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் மற்றும் வலையமைப்புக்களின் செயற்பாடுகள்.
(ii) அடைதல் பாதுகாப்பு/ கடத்தல் சொல் (Password) கட்டுப்பாடு.
(iii) தகவல் தொழில்நுட்ப முறைகளில் மாற்றம் மற்றும் முறைகளின் நடத்துகை. நிகழ்ச்சி தொகுப்பு மாற்றல் கட்டுப்பாடுகள்.
(iv) பிரயோக தகவல் தொழில்நுட்ப முறைகளை கொள்முதல் செய்தல், நிர்மானித்தல் மற்றும் நடத்தில் செல்லுதல் சமபந்தமான விதிகள் மற்றும் செயன்முறைகள்.
(v) அமைப்பு மென்பொருள் (System Software)

(b)

(i) கடவைச்சொல் பாதுகாப்பு நிகழ்ச்சிகள்.
(ii) சேர்வர் (Server) அறையை அடைவதற்கான கட்டுப்பாடுகள்.
(iii) நிகழ்ச்சி தொகுப்புக்களின் பட்டியலை பராமரித்தல்.
(iv) பின் ஆதார கோப்புகள்; நிகழ்ச்சித் தொகுப்புக்களை சேமித்தல்.
(v) வைரஸ் (Virus) பரிசீலினை.
(vi) நிகழ்ச்சித் தொகுப்பு மாற்றங்களின் ஆவணப்படுத்தல் மற்றும் பரிசீலித்தல்.
(vii) பேரளிவு மிகை நடைமுறைகள்.
(viii) வேலைப்பகிர்வு.
(ix) நிறுவுகை தகவல் மூலம் நிறுவுகை பரிசோதனைகள்.
(x) பாவனையாளருக்கான புதிய பிரயோகஙகளுக்கான அங்கீகாரம்.
(xi) ஸ்தாபித்தல் பொறிமுறை.
(xii) கடவுச்சொல் பாதுகாப்பு.
(xiii) நிகழ்ச்சித் தொகுப்புகளின் பின் ஆதன மூலங்கள்
(xiv) தீ மற்றும் ஏனைய ஆபத்துக்களிலிருந்து உபகரணங்களுக்கான பாதுகாப்பு.
(xv) உடன்படிக்கைகள் மற்றும் காப்புறதியின் நடத்துகை.

(c) பிரயோக தொழில்நுட்ப கட்டுப்பாடுகள் வணிகத்தின் செயன்முறைகளில் இயங்கும். இவை இயற்கையில் தடுப்பு அல்லது கண்டுபிடிப்பு கட்டுப்பாடுகாளகும். செயன்முறைகளின் துவக்கம், பதிவு செய்தல் , செயன்முறைப்படுத்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றுடன் தொடர்புடையது.

NOT FOR SALE

(d)

- (i) இலக்க பரிசீலனை; என்சரிபார்ப்பு
- (ii) நியாயத்துவ பரிசீலினை
- (iii) இருப்பு பரிசீலினை
- (iv) எழுத்துக்கள் பற்றிய பரிட்சிப்பு
- (v) கட்டயாயமான நிரல்கள்
- (vi) திரை எச்சரிக்கை
- (vii) ஒன்றுக்கான ஒன்று பரிசீலகை
- (viii) கைமூலப்பரிசோதனை மூலம் உள்ளீகள் அங்கீகரிப்பட்டதை சோதித்தல்
- (ix) கணணிமயப்படுத்தப்பட்ட (Programmed) உள்ளீட்டினை உள்ளீட்டுக் கட்டுப்பாட்டு கோவையுடன் ஒப்பிட்டுப் பார்த்தல்.
- (x) அனுமதிக்கப்பட்ட வரம்பு (எந்தவொரு ஊடு செயலும் குறிப்பிட்டதொரு பெறுமானத்திற்கு மேலாக அல்லது கீழாக செயன்முறை செய்யப்படுவதில்லை.

NOT FOR SALE

# பகுதி – 3

**விடை 07**

(a)

(i) நாணய முகாமைத்துவத்தில் இடர்கள்-

(a) காசாளர் <u>பற்றுச்சீட்டு வழங்காது காசைப் பெற்றுக்</u>கொள்ளலாம். இது வாடிக்கையாளருடன் கூட்டிணைந்து அவருக்கு கழிவுகள் வழங்குவதன் மூலம் செய்யலாம்.

(b) <u>பற்றுச்சீட்டின் பெறுமதியினை காசாளர் குறைக்கலாம்.</u>
ஏனெனில் பஸ்; லொறி ஆகியவற்றின் பற்றுச்சீட்டானது கார்களாக மாற்றப்படலாம்.

(c) காசு சேகரிப்பை வைப்பிலிடாமை (திருட்டு)

(ii) இரண்டு கட்டுப்பாடுகள்

(a) சுத்தம் செய்யும் ஊழியர்களால் கழுவப்பட்ட வாகனங்கள் சம்பந்தமாக பதிவொன்று (Register) பராமரிக்கப்பட வேண்டும்.

(b) இன்னுமொரு சுதந்திரமான சுயாதீனமான ஊழியர் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுகளை மேற்படி பதிவுடன் பரிசீலனை செய்ய வேண்டும்.

(c) வங்கிக் கணக்கிணக்ககூற்று

(d) தினசரி காசு சேகரிப்பு மற்றும் வங்கியிடல் சுருக்கம்

(iii) இரண்டு கட்டுப்பாடுகள்

(a) குறித்த காலப்பகுதிக்கான காசு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை தீர்மானிக்க உதவும்.

(b) காலக்கிரமமான நிதிஅறிக்கைகளை தயாரிக்க உதவும்.

(b) (i) கொள்வனவுக் கோரிக்கையின் முக்கியத்துவம் (ஆகக்கூடியது 3புள்ளிகள் வீதம்)

- கொள்வனவுகள் மத்தியமயப்படுத்தப்பட்டு இடம்பெறுகின்றன . ஒவ்வொரு விற்பனை நிலையங்களின் தேவைகளுக்கு ஏற்ப கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விற்பனை நிலையங்கள் தமது கொள்வனவு தேவைகளை சமர்பித்தவுடன் கொள்வனவு

NOT FOR SALE

கோரிக்கையானது வழங்குனரிகளிடம் கொள்வனவுக் கட்டடையிடுவதற்கான அங்கீகாரமாக கருதப்படுகிறது.

- கொள்வனவு கோரிக்கையானது ஒவ்வொரு விற்பனை நிலையத்திற்கும் தேவையான குறித்த பொருட்களின் குறித்த தொகைக்கான அடிப்படையாகக் கொண்டு தேவைக்கேற்ப கொள்வனவு கட்டளைகளை இடலாம். இது தேவையற்ற பொருட்களை கட்டளையிடுவதை அல்லது தேவையற்ற கொள்வனவுனளை தவிர்க்க உதவும்.

(ii) கட்டளையிடப்பட்ட பொருட்களின் விநியோகம்

- கொள்வனவுகள் மத்தியிலிருந்து மேற்கொள்ளப்படுவதுடன் பொருட்கள் நேரடியாக விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. ஆகவே கட்டளையிடப்பட்ட பொருட்கள் குறிப்பிடப்பட்ட விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படாமைக்கான இடர் காணப்படுகிறது.

- தரம் குறைந்த பொருட்கள், அல்லது கலாவதியான பொருட்களை விநியோகிப்பதற்கான இடர் மேலும் விற்பனை நிலையங்களால் கட்டளையிடப்படாத பொருட்கள் விநியோகப்படுவதற்கான இடர்.

- குறை வழங்கல் மற்றும் மிகை வழங்கல் அல்லது களவு

இருப்பிலுள்ள தொக்குகளின் பௌதீக பாதுகாப்பு.

- அழகுசாதன பொருட்கள் இலகுவாக நகரக்கூடியவை மற்றும் அவை களவாடப்படலாம். ஆகவே அங்கு களவுக்கான இடர் காணப்படுகிறது. வாடிக்கையாளர்கள் அல்லது வெளிநபர்கள் மற்றும் ஊழியர்கள், பணம் செலுத்தாது இலகுவாக பொருட்களை வெளியில் எடுத்துச் செல்லலாம்.

- அழகுசாதன பொருட்கள் காலவதியாகக் கூடியவை. முதலில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் முதலில் விற்பனையாகும் விதத்தில் அமைக்கப்படாவிட்டால் பொருட்கள் காலவதியாபும் இடர் காணப்படுகிறது. இது நிறுவனத்திற்கு ஒரு கிரயமாக மாறலாம்.

- உழியாகள் அல்லது வாடிக்கையாளர்கள் பொருட்கயை கையாலும் போது அவை இலகுவாக சேதமடையலாம் பொருட்கள் முறையாக காட்சிப்படுத்தப்படாவிட்டால் பொருட்கள் சேதமாகுவதுடன் மற்றுமல்லாமல் பீயூடி கொஸ்மெடிக்ஸ் நிறுவனம் நட்டமொன்றை எதிர்கொள்ளலாம்.

- களஞ்சியப்படுத்தல் வசதியின் நிலைமைகள் உதாரணம்: வெப்பநிலை கட்டுப்பாடு

NOT FOR SALE

# பொறுப்பு மறுத்தல் அறிவித்தல் - Notice of Disclaimer

இந்த விடைகள் முற்றுமுழுதாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தால் (CA Sri Lanka) தரப்பட்டுள்ளதுடன், இவற்றை மாதிரி விடைகள் என்ற அடிப்படையிலேயே நீர் ஏற்றுக் கொள்கின்றீர்.

இவை மாதிரி விடைகளாக கருதப்பட வேண்டுமே தவிர சரியான / எதிர்பார்த்த விடைகளாக அல்ல.

இந்த விடைகள் இரண்டு அடிப்படை நோக்கங்களை கொண்டுள்ளன. அவையாவன:

1. பரீட்சை வினா ஒன்றிற்கு மாதிரி விடைக்கான விபரமான உதாரணத்தை தருதல்ளூ அத்துடன்

2. பாடத்தில் மாணவரின் ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்களுக்கு உதவுவதுடன், பாடம் பற்றிய அவர்களின் அறிவு மற்றும் விளக்கத்தை அதிகரிக்க உதவுவதாகும்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் இந்த மாதிரி விடைகள் தொடர்பில் எந்தவொரு உத்தரவாதத்தையும் தரவில்லை ஆதலினால், இது தொடர்பாக எந்தவொரு துயரையும் இந்த இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நீர் கொண்டுவருதல் அர்த்தமற்றது. எனினும், நீர் இது தொடர்பாக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு எதிராக நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு, அச்சுறுத்தல் அல்லது கேள்வி எதனையும் எழுப்பி அதில் நீர் வெற்றிபெறாத இடத்து இதனால் நிறுவகத்திற்கு ஏற்படும் சட்டச் செலவுகள் மற்றும் எதிர் நடவடிக்கை தொடர்புபட்ட சகல செலவுகளையும் நீர் பட்டக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு நீர் செலுத்த வேண்டும். இதே விடயத்திற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம் அதன் இந்த உரிமையையோ அல்லது இதில் விபரிக்கப்பட்டுள்ள அல்லது இலங்கைச் சட்டங்களின் கீழான அதன் உரிமைகளையோ உறுதிப்படுத்துவதற்காக சட்ட நடவடிக்கைளை மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படின், அதற்குரிய சட்டக் கட்டணம் மற்றும் செலவுகளை நீர் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்திற்கு செலுத்த வேண்டும்.

---

© 2013 இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீலங்கா).
முழுப் பதிப்புரிமையுடையது. இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் எழுத்துமூல முன் அனுமதியின்றி இந்த ஆவணத்தின் பகுதியினை மறுபிரசுரம் செய்வதோ அல்லது எந்த வடிவத்திலும் இலத்திரனிய, எந்திர, புகைப்படப் பிரதியிடல் பதிவுசெய்தல் மற்றும் ஏனைய ஊடகங்களினூடாக அனுப்புதலோ கூடாது.

NOT FOR SALE